## திராவிட இயக்க இதழ்கள் – ‘திருவிளக்கு’



திராவிட இயக்கத் தலைவரும், தி.மு.க.வின் முன்னாள் அமைச்சருமான க.இராசாராம் அவர்களால் தொடங்கி நடத்தப்பட்ட இதழ், ‘திருவிளக்கு’. அதற்கு அவரே ஆசிரியராக இருந்தார். பொறுப்பாசிரியராக ‘தென்றல் திரை’ நாகராஜன் என்பவர் இருந்தார்.

1962-இல் அந்த இதழ் வாரப் பத்திரிகையாக தனது பயணத்தைத் தொடங்கியது. தி.மு.க கட்சி சார்பான பத்திரிகையாக இருந்தாலும் அதில் இலக்கிய மணமும் கமழ்ந்தது. 14 ஆண்டுகள் வெளிவந்த அந்த இதழ் நெருக்கடிநிலை கால தணிக்கைக் கொடுமைகளால் நிறுத்தப்பட்டது.

சுதந்திரம் அடைந்த பல்வேறு ஆப்பிரிக்க தேசங்களைப் பற்றி ‘விடுதலை பெற்ற சின்னஞ் சிறு நாடுகள்’ என்ற தலைப்பில், அவர் எழுதிய கட்டுரைத் தொடர் வாசகர்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றது. தனது படைப்புகளை ‘கவிராஜன்’ என்ற புனைப்பெயரில் வெளியிட்டு வந்தார்.

பேரறிஞர் அண்ணாவின் 57-வது பிறந்தநாளை முன்னிட்டு, 1967-இல் ‘அண்ணா மலர்’ ஒன்றை அந்த இதழ் வெளியிட்டது. அதில் அன்றைய குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன், குடியரசு துணைத் தலைவர் வி.வி.கிரி, பிரதமர் இந்திரா காந்தி உள்ளிட்ட தலைவர்களும் ஜெகஜீவன்ராம், ஐ.கே.குஜ்ரால் போன்ற வட மாநிலத் தலைவர்களும் தங்களது வாழ்த்துகளை வழங்கி இருந்தனர். அந்த மலருக்காக அன்றைய ‘சங்கர்ஸ் வீக்லி’ எனும் பிரபல இதழின் ஆசிரியரும் கார்ட்டூனிஸ்ட்டுமான சங்கர் வரைந்த ஓவியமும், சிற்பி இராசாராம் நாகப்பா உருவாக்கிய அண்ணா உருவச் சிலையை பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களும் தனி அழகைச் சேர்த்தன.

## ஃப்ளாஷ்பேக்





மதிவாணன்

### நிதியளிப்பில் பெயர் சூட்டல்!

1985-ஆம் ஆண்டு சிவகங்கையில் நடைபெற்ற தேர்தல் நிதியளிப்புக் கூட்டத்தில், பங்கேற்பதற்காக வருகை தந்திருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்போது, தலைவர் கலைஞர் என் மகனுக்கு பெயர் சூட்ட வேண்டும் என்று விருப்பப்பட்டேன். மேடையில், ஏற முயன்று கொண்டிருந்த என்னை அருகில் அழைத்த அவர், பின்னால் நிற்க வைத்துக் கொண்டார். என் மகனுக்கும் ‘அன்பானந்தன்’ என்று பெயர் சூட்டினார்.

**– மதிவாணன்,**
**கிளைச் செயலாளர், சிவகங்கை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### “அழைப்பு விடுக்க வேண்டாம்!”

1952-ஆம் ஆண்டில், தொடர் பயணங்கள், பொதுக்கூட்டம் காரணமாக, பேரறிஞர் அண்ணாவுக்கு சற்று உடல்நலக் குறைவு ஏற்பட்டது. கட்சி தொடங்கி, மூன்று ஆண்டுகளில், கட்சிக் கூட்டங்கள், பொதுக் குழு, செயற்குழுக் கூட்டங்கள், திரைப்படங்கள், பத்திரிகை, நாடகங்கள் இவற்றுக்கிடையே படிப்பு, பயணம் என கடுமையாகப் பணியாற்ற வேண்டியிருந்தது. இதனால், உடல்நிலை பாதிக்கப்பட்ட விவரத்தைக் கூறிய ‘திராவிட நாடு’ இதழ் “தோழர்கள் தொடர்ந்து இரண்டு மாதங்கள் வரை கூட்டங்கள், விழாக்கள் என்று தோழர் சி.என்.ஏ.வுக்கு அழைப்புகள் விடுக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டது.

## முதன் முதலில் 17

# சிலையும் பேசும்!

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**

‘கடவுளை மற... மனிதனை நினை’ என்பார் தந்தை பெரியார். அதுவும் மக்களுக்கு உழைத்த மறைந்த பெருந்தலைவர்களை திருவுருவப் படங்கள் மூலம் நினைவில் ஏந்துவதை அவர் எப்போதும் ஆதரித்தே வந்திருக்கிறார்.

படங்கள் மூலமாக மட்டுமல்லாமல், அவர்களது சிந்தனைகளையும் மக்கள் தெரிந்து, அவர்கள் அதன்படி நடக்க வேண்டும் என்று விரும்பியவர் அவர்.

அதற்கான முன்னெடுப்பு அவரது சிலையில் இருந்தே தொடங்கியது என்பதுதான் அதில் உள்ள அழகு! ஆம், முதன்முதலில் தலைவர்கள் சிலையின் கீழ் உள்ள பீடத்தில் அவர்களின் சிந்தனைகளை பொன்மொழியாக எழுதி வைக்கும் மரபு திராவிட இயக்கத்தில் இருந்துதான் தொடங்கியது.

**அன்று முதல் பெரியாரின் சிலைகள் முளைக்க மட்டுமல்ல, பேசவும் செய்தன. ஆம், அவர் சிலைகள் நின்று பேசும்... என்றும் பேசும்..!**

1944-இல் கடலூர் மஞ்சக்குப்பம் பகுதியில், கூட்டம் ஒன்றை முடித்துவிட்டு, திரும்பும்போது பெரியார் மீது செருப்பு ஒன்று வீசப்பட்டது. சுமார் 30 ஆண்டுகள் கழித்து, அதாவது 1972-இல் அதே இடத்தில் அவருக்குச் சிலை வைக்கப்பட்டது. அப்போது, கவிஞர் கருணானந்தம் அவர்கள் ‘செருப்பு ஒன்று வீசினால் சிலை ஒன்று முளைக்கும்’ என்று எழுதினார்.

ஆனால், அந்தச் சிலை வைப்பதற்கு முன்பாகவே 70-களில் இருந்தே தஞ்சை, தர்மபுரி ஆகிய ஊர்களில் பெரியார் சிலைகள் எழுப்பப்பட்டு, அவற்றின் அடிப்பீடத்தில் கடவுள் மறுப்புத் தொடர்கள் எழுதப்பட்டிருந்தன. அவற்றை எதிர்த்தும், அந்த வரிகளை நீக்க வேண்டும் என்று கோரியும், முன்னாள் துணைமேயர் டி.ஜி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை உயர் நீதிமன்றத்தில் 1970-இல் வழக்குத் தொடர்ந்தார். பக்திமான்கள் நம்பிக்கையையும் உணர்வுகளையும் அந்த வரிகள் காயப்படுத்துவதாக தனது மனுவில் கூறியிருந்தார். அந்த வழக்கு, நீதிபதி எம்.எம்.இஸ்மாயில் அவர்களின் அமர்வுக்கு வந்தது.

மூன்றாண்டுகள் நடைபெற்ற அந்த வழக்கில் இறுதியாக, 1973-ஆம் ஆண்டு அக்டோபர் 11 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில், “மனுதாரர் குறிப்பிட்டிருப்பது போல அந்த வாசகங்கள் பொது ஒழுங்கிற்கு குந்தகம் ஏற்படுத்தும் என்று கருத இடமில்லை” என்றும், “சட்டப்பிரிவு இ.பி.கோ. 295-25(1) கீழ் இது வராது” என்றும் கூறி, நீதிபதி இஸ்மாயில் வழக்கைத் தள்ளுபடி செய்தார்.



மேலும் அவர், “ஒரு தலைவருக்கு, சிலை வைக்கும்பொழுது அவருடைய கொள்கை என்னவோ அதைத்தான் அவருடைய சிலை பீடத்தின் கீழே போடவேண்டும் என்று, எதிர்பார்க்க வேண்டுமே தவிர, பெரியாருக்குச் சிலை வைக்கும்பொழுது சங்கராச்சாரியாருடைய மேற்கோளையா போடுவார்கள்?” என்று கேள்வி எழுப்பினார்.

அதன்பிறகு, எந்த ஊரில் சிலை வைத்தாலும், அந்தச் சிலையின் அடிப்பீடத்தில் இந்தத் தொடர்களை எழுதுவது வழக்கமான ஒன்றாகி விட்டது.

ஆம்... அன்று முதல் பெரியாரின் சிலைகள் முளைக்க மட்டுமல்ல, பேசவும் செய்தன. ஆம், அவர் சிலைகள் நின்று பேசும்... என்றும் பேசும்..!.

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 17


**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# மூத்த பிள்ளையின் அறிவுப் பரிசு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு தமிழ்நாடு முழுக்க பலரால் பலவாறு கொண்டாடப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெற்றெடுத்த மூத்த பிள்ளையாம் ‘முரசொலி’ தனக்கே உரியப் பண்புடன் “தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர்-2024” என்ற பெரும் அறிவுக் களஞ்சியத்தை, தமிழ்ச் சமூகத்திற்கு அளித்துள்ளது.

2023-ஆம் ஆண்டு ஜூன் 3 முதல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், மாதந்தோறும் 3-ஆம் நாள் தன் தந்தைக்கு நூற்றாண்டு சிறப்பிதழை வெளியிட்டு வந்தது முரசொலி. தலைவர்கள், அறிஞர்கள், திரைக் கலைஞர்கள், கவிஞர்கள், பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் எனப் பலரும் முத்தமிழறிஞர் கலைஞர் குறித்த நினைவலைகளைப் பகிர்ந்துள்ளார்கள். திருப்பும் பக்கங்களில் எல்லாம் வளம் செறிந்த தகவல்களையும் சுவாரசியம் நிறைந்த அனுபவங்களையும் கொண்டு வெளியாகி இருக்கிறது இத்தொகுப்பு.

**‘விலை மதிப்பில்லா இந்த பொக்கிஷம்’ கழகத்தினர் இல்லங்களில், தமிழர்களின் கைகளில் தவழ, எல்லா சிறப்புகளையும் கொண்டுள்ளது.**



முரசொலி ஆசிரியர் குழு, தயாரித்துள்ள இம்மலரை ஜூன் 3 அன்று முரசொலி வளாகத்தில் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட முரசொலி செல்வம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முரசொலி மாறன் தொடங்கி கழகத் தலைவர், கழகப் பொதுச்செயலாளர், இளைஞர் அணிச் செயலாளர் என பலரும் எழுதிய கருத்தாழமிக்க கட்டுரைகள் இன்னும் பல நூறாண்டுகளுக்கு கலைஞர் புகழ் சொல்லும் கருத்துக் கருவூலங்களாக இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

“சங்கீதத்திற்கு மொழியில்” என்ற பொருளைக் கருவாகக் கொண்டு ‘தமிழ் இசை’ பற்றி கலைஞர் எழுதிய கட்டுரை ஒன்று இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. ‘ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பார்களே, அப்படியான கட்டுரை இது. சுரம், ராகம், பாவம், தாளம் தொடங்கி, பூபாளம், மருதப் பண், செவ்வழிப் பண் உள்ளிட்ட பண் வகைகளைக் குறிப்பிட்டு, ஏற்றம்-இறக்கம்-அலுக்கல் என இசைச்சுரம் வரையிலும் பழந்தமிழில் இருக்கும் தமிழிசை தொடர்பான சொற்களை எல்லாம் பட்டியலிடுகிறார், முத்தமிழறிஞர் கலைஞர். “நமக்குப் பெரும்பாலும் புரிந்த மொழியில் சொல்வது புரியாது, புரியாத மொழியில் சொல்வது தான் புரியும்” என முடியும் இந்த கட்டுரையின் எல்லாப் பகுதியும் வாசிப்பு அனுபவத்தின் உச்சம் எனச் சொல்ல முடியும்.

மனதை மயக்கும் டிஜிட்டல் ஓவியங்கள், அரிய புகைப்படங்கள், கலைஞரின் நகைச்சுவைத் துணுக்குகள், பகுத்தறிவும் இனமானமும் ஊட்டும் மேற்கோள்கள் எனக் கட்டுரைகளுக்கு இடையிடையே வந்து செல்லும் ஆச்சரியமூட்டும் குறுந்தகவல்கள் மலரை மேலும் சிறப்புக்குரியதாக்கி உள்ளன.

நூலின் முகப்பு முதல் கடைசி அட்டை வரை, முத்தமிழறிஞர் கலைஞர் பல்துறை வல்லுநராக மிளிர்கிறார். அரசியல், இதழியல், திரைத்துறை, இலக்கியம், நிர்வாகம், கல்வி, கலை சார்ந்த ஆளுமைகளுடன் தனது இறுதி காலம் வரை அவர் உரையாடி இருக்கிறார். அவை அனைத்தும் மேலோட்டமான தொடர்புகள் அல்ல ஆழமானவை. அப்படியான ஆழமாக அனுபவங்களை ஒருங்கே தொகுத்தளித்ததன் மூலம் முத்தமிழறிஞரின் மூத்த பிள்ளையாம் முரசொலி, தன்னுடைய தந்தைக்கு மிகச் சிறப்பான பிறந்தநாள் பெருமையைத் தந்துள்ளது.


‘விலை மதிப்பில்லா இந்த பொக்கிஷம்’ கழகத்தினர் இல்லங்களில், தமிழர்களின் கைகளில் தவழ, எல்லா சிறப்புகளையும் கொண்டுள்ளது.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

519

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131